

Freedom from Torture

சுருக்கம்

# மிகச் சிறிய மாற்றம்:

## இலங்கையில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் தொடரும சித்திரவதை

ஜனவரி 2019

# சுருக்கம்

சித்திரவதை தொடர்பில் "சகிப்புத்தன்மை முற்றிலுமின்மை" எனும் கொள்ளை குறித்து புதிய அரசாங்கத்தின் வாக்குறு இருந்தபோதிலும், யுத்தத்திற்குப் பின்னரான தற்போதைய பாதுகாப்பு நடவடிக்கை பற்றியதொரு சூழமைவில், சித்திரவதை போன்றன தொடர்ந்தும் இடம்பெற்றுள்ளதாக (Freedom from Torture) கண்டறிகிறது.

இந்த சுருக்கத்தகவலானது 2015 மற்றும் 2017 ஆண்டுகளுக்கிடையில் தடுத்துவைக்கப்பட்ட மற்றும் சித்திரவதை செய்யப்பட்ட இலங்கையர்களுக்காக Freedom from Torture அமைப்பினால் தயாரிக்கப்பட்ட 16 மருத்துவ சட்ட அறிக்கைகளை பரீட்சிக்கின்றது.

நாங்கள் எடுத்துக்கொண்ட விடயத்தில், தடுத்துவைக்கப்பட்ட மற்றும் சித்திரவதைசெய்யப்பட்ட அனைவரும் தமிழர்களாவர். இலக்குவைக்கப்பட்ட மற்றும் தடுத்துவைக்கப்பட்ட இவர்களில் அதிகமானோர், எந்தவொரு பயங்கரவாத நடவடிக்கையினையும் தற்போது வெளிக்காட்டாதிருந்த போதிலும், "மறுமலர்ச்சி" யின் ஒரு அங்கமாக அல்லது யுத்தத்திற்குப் பின்னர் சரணடையாமை காரணமாக தமிழீழ விடுதலைப் புலிகளுடனான (LTTE) சமகால ஈடுபாட்டின் போரில் அரச அதிகாரிகளினால் குற்றம் சாட்டப்பட்டவர்களாவர். அரச விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகச் சந்தேகப்பட்டவர்களும்கூட இதில் இலக்கு வைக்கப்பட்டனர். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அல்லது ஏனைய சட்டத்தின் கீழ் முறையாக எவரும் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கவில்லை.

கொழும்பு நகரில் நான்கு நபர்கள் கைதுசெய்யப்பட்டிருப்பினும், வட மாகாணத்திலுள்ள மாவட்டங்களிலேயே அனேகமானோர் கைதுசெய்யப்பட்டும், தடுத்துவைக்கப்பட்டும் காணப்பட்டனர். அனைத்து சந்தர்ப்பங்களிலும், LTTE சந்தேக நபர்கள் தொடர்பான அல்லது அரச விரோத நடவடிக்கை தொடர்பான தகவல் சாராம்சங்களை அல்லது ஒப்புதல் வாக்குமூலங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அரச அதிகாரிகள் சித்திரவதையினையே உபயோகித்தனர். பல்வேறு உபகரணங்களைக் கொண்டு தாக்குதல், எரித்தல், உடலின் குறிப்பான இடத்தில் சித்திரவதை செய்தல் மற்றும் மூச்சுத்திணறவைத்தல், அத்துடன் அச்சுறுத்தல் மற்றும் அவமானப்படுத்தல் போன்றன உள்ளிட்ட உடல் ரீதியான மற்றும் உள ரீதியான சித்திரவதையினை அனைவரும் அனுபவித்தனர். அரைவாசிக்கும் மேற்பட்டோர் பாலியல் வல்லுறவிற்கு உள்ளாகியிருப்பதோடு, மேலும் அனேகமானோர் பாலியல் சித்திரவதைக்கும் ஆளாகியுள்ளமை வெளிக்காட்டப்பட்டது.

2015 இல், ஜனாதிபதி மைத்திரிப்பால சிறிசேனவின் புதிய அரசாங்கமானது, பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான உறுதிமொழியினை வழங்கியதோடு, இது நல்லிணக்கத்திற்கான இன்றியமையாத அம்சமாகவும் திகழ்ந்தது. இலங்கை ஒரு விரிவான மனித உரிமை சீர்திருத்த நிகழ்ச்சிநிரல் தொடர்பில் சில

முன்னேற்றத்தினை மேற்கொண்டுள்ளது. இதில் காணாமற்போனோர் பற்றிய அலுவலகத்தினைத் தாபித்தமை மற்றும் ஐக்கிய நாடுகளின் விசேட பொறிமுறைகளுக்கான பல விஜயங்களை அனுமதித்தமை போன்றன உள்ளடங்குகின்றன.

இருப்பினும், இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் போன்றவற்றை மேம்படுத்தும் வகையில் ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு (UN Human Rights Council) 2015 செப்டம்பரில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கடப்பாடுகள் குறித்தான மேற்படி நடவடிக்கைகள் குறைவடைந்துள்ளன. இலங்கை தனது வாக்குறுதிகளை தொடர்ந்தும் உதாசீனப்படுத்துகிறது என்பதற்கு, அது சித்திரவதையினை தொடர்ந்தும் உபயோகித்து வந்தமை ஒரு தெளிவான எடுத்துக்காட்டாகும்.

சித்திரவதையிலிருந்து உயிர்ப்பிழைத்து வாழ்கின்ற இலங்கையர்கள் தொடர்ச்சியான மீறல் நடவடிக்கைகள், நீதி மற்றும் பொறுப்புக்கூறலில் தொடர்ந்தும் நியாயம் கிடைக்காமை மற்றும் நல்லிணக்க முயற்சிகளை வலுவிழக்கச் செய்வதற்கு வழியமைக்கும் வகையில் தண்டனையிலிருந்தான விடுபாட்டுரிமைக் கலாசாரம் போன்வற்றுக்கிடையில் ஒரு நேரடி தொடர்பு உள்ளதைக் காண்கின்றனர்.

2018 இன் இறுதியில் இலங்கையில் பூகம்பமாக வெடித்த அரசியல் மற்றும் அரசியலமைப்பு சார்ந்த நெருக்கடி நிலைமைகூட பொறுப்புக்கூறல் செயலாக்கத்திற்கான கடப்பாட்டினைக் கொண்ட கூட்டணி அரசாங்கத்தின் பலவீனத்தைச் சுட்டிக்காட்டியதோடு, எந்தவொரு முன்னேற்றமும் துரித கதியில் தலைகீழாகத் திரும்பக்கூடியது என்பதனையும் நிரூபித்தது.

2015 இல் உடன்பட்டதும் 2017 இல் புதுப்பிக்கப்பட்டதுமான முதலாவது தீர்மானம் ஒன்று குறித்தான விடயங்களைப் பின்தொடர்ந்து, ஐ.நா. மனித உரிமைகள் சபையானது இலங்கை மீதான தனது குவிமையத்தினை தொடர்ந்தும் பேணுவதா இல்லையா என்பது பற்றிய தீர்மானத்தினை 2019 மார்ச்சு மாதத்தில் எடுக்கவுள்ளது. நான்கு வருடங்களுக்கு முன்னர் பொறுப்பேற்றுக்கொண்ட கடப்பாடுகள் தொடர்பில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட மெதுவான முன்னேற்றம் பற்றிய தொகுப்புடன் கூடிய இந்த சுருக்கத்தகவலில் காணப்படும் சான்றுகள், சமகால சர்வதேச கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளுக்கான கண்டிப்பான நிலைமை வலுவாகக் காணப்படுவதை உணர்த்துகின்றது. முன்னேற்றம் நோக்கிய சீர்திருத்தம், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியன இடைநிறுத்தப்படவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கு புதுப்பிக்கப்பட்டதொரு மனித உரிமைகள் சபைப் பணிப்பாணையினூடான சமகால சர்வதேச நுண்ணாய்வு மற்றும் ஆதரவு நடவடிக்கைகள் இன்றியமையாதவை என Freedom from Torture நம்புகிறது.

இலங்கை அரசாங்கமானது வாய்மொழி உத்தரவாதங்களுக்கும் அப்பால் செல்லவேண்டியுள்ளதோடு, தனது பொறுப்புக்கூறல் தொடர்பில் நாட்டு மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் அது வழங்கிய உறுதிமொழிகளை அமுல்படுத்தும் நோக்கில், ஒரு கால வரையறையினுள் தமது கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு உடன்படவேண்டியும் உள்ளது.

# பரிந்துரைகள்

## இலங்கை அரசாங்கத்திற்கானது:

சர்வதேச மனித உரிமைகள் பற்றிய நியமங்கள் மற்றும் உள்நாட்டு சட்டம் ஆகியவற்றின் கீழான அதன் கடப்பாடுகள் தொடர்பில், அரசாங்கமானது கண்டிப்பாக:

1. கீழுள்ள வழிமுறைகள் மூலம் ஒரு யதார்த்தபூர்வ விடய சித்திரவதை தொடர்பில் 'சகிப்புத்தன்மை முற்றிலுமின்மை' பற்றிய அதன் கொள்கையினை உருவாக்குதல் வேண்டும்:

   (i) சித்திரவதை தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களை கடமையிலிருந்து இடைநிறுத்தி வைப்பதோடு, அத்தகைய நபர்கள் அரசாங்கத்தினுள் அல்லது இராணுவம், பொலிஸ் மற்றும் பாதுகாப்புச் சேவைகளினுள் எந்தளவு அதிகாரம் மிக்கவர்களாகவோ அல்லது சிரேஷ்ட அந்தஸ்த்து மிக்கவர்களாகவோ இருப்பினும், அவர்களுக்கு எதிராக குற்றவியல் விசாரணையினை ஆரம்பித்து வழக்குத் தொடர்தல்;

   (ii) சகிப்புத்தன்மை முற்றிலுமின்மை பற்றிய கொள்கையினை எடுத்துக் கூறும் வகையில் சர்வதேச ரீதியில் பொதுமக்களுக்கான தகவல் பிரச்சாரம் ஒன்றினை ஆரம்பித்து வைப்பதோடு, சித்திரவதையிலிருந்து உயிர் தப்பியவர்கள் புனர்வாழ்வு மற்றும் பொறுப்புக்கூல் போன்றன பற்றிய தகவல்களை எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும் என்பது குறித்தான தகவல்களையும் வழங்குதல்;

2. கைதுசெய்யப்பட்ட எந்தவொரு ஆளுக்கும் பின்வருவன உள்ளடங்கலான சட்டத்தால் தாபிக்கப்பட்ட நடவடிக்கை முறைமை வழங்கப்படுவதை உறுதிப்படுத்தல் வேண்டும்:

   (i) அவர்களது விருப்பத்திற்கு ஏற்ப சட்ட பிரதிநிதிகளை உடனடியாகப் பெற்றுக்கொள்ளல் மற்றும் சுயாதீன மருத்துவப் பரிசோதனைகளை உடனடியாகப் பெற்றுக்கொள்ளல்;

   (ii) உத்தியோகபூர்வமற்ற தடுப்புக்கால் நிலையங்களிலுள்ளவர்கள் உள்ளிட்ட எந்தவொரு தடுப்புக்காவலிலுள்ளவரும், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டதொரு குற்றத்திற்காக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தாலெழிய அல்லது சர்வதேச நியமங்களின் அடிப்படையில் நியாயமானதொரு விசாரணையின் பின்னர் தண்டனை விதிக்கப்பட்டாலொழிய, அவர்கள் விடுவிக்கப்படுதல்;

   (iii) 'ஒப்புதல் வாக்குமூலம்' மற்றும் சித்திரவதை மூலம் பெறப்பட்ட ஏனைய சான்று குறித்தான அனைத்து சூழ்நிலைகளிலும் விலக்கிவைத்தல்.

3. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது அதன் பணிப்பாணையினை வினைத்திறன் மிக்க முறையில் நாடு முழுவதும் முன்னெடுக்க முடிவதை உறுதிப்படுத்தும் நோக்கில் அதற்குப் போதுமான நிதி வழங்கப்படுவதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

4. நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கில் குறித்த கடப்பட்டினை நடைமுறைப்படுத்துவதற்கான தெளிவானதொரு கால வரையறையினைக் கொண்ட புதுப்பிக்கப்பட்ட மனித உரிமைகள் சபைத் தீர்மானம் ஒன்றின் ஊடாக குறித்த கடப்பாட்டினை மீள வலியுறுத்தல்.

## சர்வதேச சமூகத்திற்கானது:

ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகள்:

1. இலங்கை அரசாங்கத்துடனான மனித உரிமைகள் குறித்தான இருதரப்பு மற்றும் பல்தரப்பு கலந்துரையாடல்கள் அனைத்திலும், சித்திரவதை உள்ளிட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான அக்கறைமிக்க விடயங்கள் பற்றிய கருத்துக்கள் முன்வைக்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டுமென்பதோடு, சர்வதேச மனித உரிமைகள் பற்றிய நியமங்கள் மற்றும் அரசியலமைப்பு ஆகியவற்றின் கீழான தமது கடப்பாடுகளை நிறைவுசெய்வதற்கு ஊக்கமளித்தல் வேண்டும்.

2. விசேடமாக தொடர் அரசியல் ஸ்திரமின்மையுடன் கூடிய சூழமைவொன்றின்போது, முன்னேற்றம் நோக்கிய சீர்திருத்தம் முன்னெடுக்கப்படுவதை உறுதிசெய்வதற்கான புத்தாக்கம் மிக்க மனித உரிமைகள் சபைப் பணிப்பாணை ஒன்றினூடாக இலங்கை அரசாங்கத்திற்கான சமகால ஆதரவு மற்றும் நுண்ணாய்வு நடவடிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

3. மனித இனத்திற்கு எதிரான குற்றங்கள், யுத்தக் குற்றங்கள், சித்திரவதை மற்றும் வலுக்கட்டாயமாக காணாமலாக்குதல்கள் போன்ற குற்றங்களைப் புரிந்தவராக சந்தேகிக்கப்படுகின்ற எந்தவொரு இலங்கையருக்கு எதிராகவும், அவர் அரசாங்க அதிகாரியாக அல்லது LTTE உறுப்பினராக இருந்தபோதிலும், உலகளாவிய நியாயாதிக்கத்தின் கீழ் விசாரணையை முன்னெடுத்து வழக்குத் தொடர்தல் வேண்டும்.

# FREEDOM FROM TORTURE

Freedom from Torture அமைப்பானது சித்திரவதையிலிருந்து உயிர்பிழைத்து வாழ்வோருக்கு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு அளிப்பதற்கான அர்ப்பணிப்புடன், ஐக்கிய இராச்சியத்தினை மாத்திரம் தளமாகக் கொண்டு இயங்கிவருகின்ற மனித உரிமைகள் அமைப்பாகும். நாங்கள் இங்கிலாந்து மற்றும் ஸ்கொட்லாந்து போன்ற நாடுகள் முழுவதிலுமுள்ள, வருடமொன்றுக்கு சுமார் 1,000 சித்திரவதையிலிருந்து உயிர்பிழைத்து வாழ்வோருக்கான சேவைகளை வழங்கிவருகின்றோம். எமது இந்த சேவைகளில் உளவியல் மற்றும் உடல் சார்ந்த சிகிச்சைகள், சித்திரவதை பற்றிய மருத்துவத்தடய ஆவணம், சட்டம் மற்றும் நலன்புரி சார்ந்த ஆலோசனைகள் மற்றும் ஆக்கபூர்வமான கருத்திட்டங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன.

நாங்கள் உலகின் பாரிய புனர்வாழ்வு மையங்களைக் கொண்டதொரு அமைப்பாகத் திகழ்ந்து வருவதோடு, 1985 இல் நாங்கள் தாபிக்கப்பட்டது முதற்கொண்டு, சித்திரவதையிலிருந்து உயிர்பிழைத்த சுமார் 60,000 இற்கும் மேற்பட்டவர்கள் எம்மிடம் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளனர். எமது நிபுணத்துவம் வாய்ந்த மருத்துவர்களினால் தயாரிக்கப்பட்ட மருத்துவ சட்ட அறிக்கைகள், சித்திரவதையிலிருந்து உயிர்பிழைத்தோரின் சர்வதேச பாதுகாப்பிற்கான கோரிக்கைகளில் சான்றாக உபயோகிக்கப்படுவதோடு, சித்திரவதையினை மேற்கொள்ளும் நாடுகளை இலக்காகக் கொண்டு இதுபோன்ற ஆராய்ச்சி அறிக்கைகளின் அடிப்படையினை வடிவமைப்பதற்கும் உபயோகிக்கப்படுகின்றன.

எமது சித்திரவதை பற்றிய வகைப்பொறுப்பு நிகழ்ச்சித்திட்டத்தினூடாக, தடுப்புக்காவலை வலுப்படுத்தல், நீதியைப் பாதுகாத்தல் மற்றும் சித்திரவதையிலிருந்து உயிர்பிழைத்து வாழ்வோருக்கான சர்வதேச ரீதியான பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் போன்றவற்றுக்கான முயற்சிகளுக்கு ஆதரவளித்து சித்திரவதையினை வெளிக்கொணர்வதற்கு நாம் பணியாற்றுகின்றோம். சித்திரவதையிலிருந்து உயிர்பிழைத்து வாழ்வோரின் குரல்கள் மற்றும் நிபுணத்துவம் போன்றனவே இந்தப் பணியின் இன்றியமையாத அம்சங்களாக விளங்குகின்றன.

சித்திரவதையிலிருந்து விடுபட்ட உலகை கட்டியெழுப்புதவற்காக பணியாற்றும் நோக்கில், எமது உள்துறை நிபுணத்துவம் வாய்ந்த மருத்துவர்களின் சான்று மற்றும் நாம் பணியாற்றுகின்ற சித்திரவதையிலிருந்து உயிர்பிழைத்தோரின் சான்று ஆகியவற்றை முறையாகப் பயன்படுத்துகின்ற ஒரேயொரு மனித உரிமைகள் அமைப்பாக நாங்களே விளங்குகின்றோம்.

Freedom from Torture

# மிகச் சிறிய மாற்றம்:

## இலங்கையில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் தொடரும் சித்திரவதை

Freedom from Torture பற்றி மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள, தயவுசெய்து www.freedomfromtorture.org எனும் இணைய முகவரிக்குச் சென்று பார்வையிடவும்.

Twitter @FreefromTorture இல் எம்மைப் பின்தொடர்க.

அல்லது Facebook https//www.facebook.com/FreedomfromTorture
இல் இணைந்துகொள்க.

Freedom from Torture
111 Isledon Road, London, N7 7JW.
Tel: 020 7697 7777
Fax: 020 7697 7799

Please visit our website to find out more:
www.freedomfromtorture.org

பதிவுசெய்யப்பட்ட அறக்கட்டளை நிறுவனம்: England 1000340, Scotland SC039632.
புலம்பெயர் சேவைகள் ஆணையாளர் அலுவலகம் (Office of the Immigration Services Commissioner)
பதிவு இலக்கம்: N201600022.